எனது இல:வகிமா/கூ/திட்/02.
கூட்டுறவுத் திணைக்களம்,
திருகோணமலை,
31.12.1999

சுற்றறிக்கை இல:5/99

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.

**கூட்டுறவுச் சட்டத்தின் 58ம் பிரிவின்கீழ் ஆற்றுப்படுத்தும் பிணக்குகள் தொடர்பாக நடுத்தீர்ப்பாளர்களை நியமனஞ் செய்வதும், அவர்களுக்கான கொடுப்பனவுகளும்.**

கூட்டுறவுச் சட்டத்தின் 58ம் பிரிவின்கீழ் ஆற்றுப்படுத்தும் பிணக்குகள் கூட்டுறவுச் சங்கங்களின் விதி 49ல் குறிப்பிட்டவாறு தீர்க்கப்படுதல் வேண்டும். இதற்கமைய நியமிக்கப்படும் நடுத்தீர்ப்பாளர்களின் தகைமைகளும் அவர்களுக்கான கொடுப்பனவுகளும் 01.01.2000ம் ஆண்டிலிருந்து பின்வருமாறு அமைந்திருக்கும்.

**01. பிணக்கின் பெறுமதிகளின் அடிப்படையில் ஒவ்வொரு விசாரணைக்கும் நடுத்தீர்ப்பாளர் ஒருவருக்கு வழங்கக்கூடிய கட்டணங்கள் பின்வருமாறு.**

| தொகைகள் | | கட்டணங்கள் |
|---|---|---|
| 5000.00 | வரையிலானவை | 500.00 |
| 5001.00 | 10000.00 | 1100.00 |
| 10001.00 | 25000.00 | 1800.00 |
| 25001.00 | 100000.00 | 2100.00 |
| 100001.00 | 250000.00 | 2750.00 |
| 250001.00 | 500000.00 | 4000.00 |
| 500001.00 | இற்குமேல் | 6000.00 |

02. **பொதுப் பிணக்குகள்**
**தொகைகளும் தகைமைகளும்**

2.1. **ரூ.5000 வரையிலான பிணக்குகள்:**
கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் 11 "ஆ" பிரிவைச் சேர்ந்த 05வருடசேவை அனுபவமுள்ள, பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர்.

2.2. **ரூ.5001 தொடக்கம் 10000 வரையிலான பிணக்குகள்:**
கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் ||"ஆ" பிரிவைச் சேர்ந்த 08வருடசேவை அனுபவமுள்ள, பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர் அல்லது கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் 11 "அ" பிரிவைச் சேர்ந்த 05வருட சேவை அனுபவமுள்ள ஒருவர்.

2.3. **ரூ.10001 தொடக்கம் 25000 வரையிலான பிணக்குகள்:**
கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் 11 'அ' பிரிவில் 10வருட சேவையுடைய உத்தியோகத்தர் ஒருவர்.

2.4. **ரூ.25001 தொடக்கம் 100000 வரையான பிணக்குகள்:**
கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் 1 பிரிவில் உள்ள ஒருவர் அல்லது கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் 11 "அ" "பிரிவில் 15 வருடசேவை அனுபவமுள்ள ஒருவர்.

2.5. **ரூ.100001 தொடக்கம் 250000 வரையான பிணக்குகள்:**
கூட்டுறவுச் சங்கப் பரிநோதகர் தரம் 1 பிரிவில் 05வருட சேவை அனுபவமுள்ள ஒருவர்.

2.6. ரூ.250001 தொடக்கம் 500000 வரையான பிணக்குகள்:
இலங்கை நிர்வாக சேவையிலுள்ள ஒருவர் அல்லது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பதவியில் உள்ள ஒருவர் அல்லது மாவட்ட கூ.அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர்.

03. <u>கடன் தொடர்பான பிணக்குகள்:</u>
<u>தொகைகளும் கடமைகளும்.</u>

3.1. ரூ.10000 வரையான பிணக்குகள்:
கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் II "ஆ" பிரிவில் 03வருட சேவையுள்ள பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர்.

3.2. ரூ.10000ற்கு மேல் உள்ள பிணக்குகள்:
கூ.ச.பரிசோதகர் தரம் 11 "ஆ" பிரிவில் 08வருட சேவையுள்ள (சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட) ஒருவர் அல்லது கூ.ச.பரிசோதகர் தரம் II அ பிரிவில்05வருடசேவையுள்ள ஒருவர்.

3.3. கட்டணம்:
சகல விதமான கடன் பிணக்குகளுக்கும் நடுத்தீர்ப்பாளர் கட்டணமாக ரூபா.200.00 வழங்கப்படும்.

04. தபால் காகிதாதி செலவுகள்:
சகலவிதமான பிணக்குகளின் விசாரணைகள் தொடர்பாகவும் ஏற்படும் காகிதாதி முத்திரைச் செலவுகளுக்கு ரூ.150.00ற்கு மேற்படாமல் வழங்கப்படும். இச் செலவுகளுக்கான பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பித்து பணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

05. நடுத்தீர்ப்பாளர்களை நியமிக்கும்போது அல்லது சிபாரிசு செய்யும்போது அவர்களது திறமை நேர்மை ஆற்றல் என்பன உங்களால் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

06. ரூ.25000 வரைக்கான பிணக்குகள் உங்களாலேயே நடுத்தீர்ப்பாளர் ஒருவருக்கு ஆற்றுப்படுத்தலாம். ரூ.25000ற்கு மேற்பட்ட பிணக்குகள் யாவற்றுக்கும் எனது அனுமதிக்கமையவே நடுத்தீர்ப்பாளர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

07. இவ்வாறு ஆற்றுப்படுத்தும் பிணக்குகள் நியமனத் திகதியிலிருந்து 03 மாதத்தினுள் குறிப்பிட்ட நடுத்தீர்ப்பாளரால் விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்படல் வேண்டும். காலநீடிப்பு கோருமிடத்து நியாயமெனக் காணப்படின் நீடிப்பு வழங்கப்படலாம்,. அல்லது அவரது இடத்திற்கு பிறிதொருவர் நியமிக்கப்படல் வேண்டும்.

08. நடுத்தீர்ப்பாளர் ஒருவரால விசாரணை முடிவுறுத்தப்பட்டு அறிக்கைகள் தங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டதும் அவற்றின் தரம் பற்றி தங்களால் ஆராய்ந்து உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படல் வேண்டும்.

09. நடுத்தீர்ப்புக் கட்டணமாக சங்கங்களிடமிருந்து பெறப்படும் வைப்புக்கள் யாவற்றிற்கும் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதுடன் இதற்கான பேரேடு ஒன்றும் பேணப்பட்டு வருதல் வேண்டும்.

10. இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட இவ்விடயம் தொடர்பான சுற்றறிக்கைகள் யாவும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

க.சிவசிதம்பரம்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்(வகி).